
ராணி
காமிக்ஸ்
முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்
கொலைகார
ராணி
ரூ. 3

ராணி காமிக்ஸ் – 302 ஜனவரி 16 – 31
(மாதம் இருமுறை இதழ்) 1997

முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்

கொலைகார ராணி

பெங்காலியாவிற்கு அருகில் உள்ள பயங்கரக் காட்டில் பல மர்மமான இடங்கள் இருக்கின்றன. அடர்காட்டில்– மாயாவியின் மண்டைஓட்டுக் குகை உள்ளது.


தங்கக் கடற்கரையில் அமைந்த மரகதக் குடில் மிகவும் பிரசித்திப்பெற்றது.

அனைத்து மிருகங்களும் ஒற்றுமையுடன் கூடிவாழும் ஈடன் தீவு.

அதே காட்டுக்குள் இதுவரை மாயாவியே அறிந்திராத ஒரு இரகசிய இடம் உண்டு. அது பீனிக்ஸ் நகரம். மிகவும் பாழடைந்த நகரம்.

காட்டுக்குள் இருந்த மோசஸ் தாத்தாவிடம் மாயாவியும் ரெக்சும் கதை கேட்கச் சென்றார்கள்.
மோசஸ் தாத்தா! காட்டுக்குள்ளே பாழடைந்த நகரம் ஒன்று இருக்குதாமே! அதைப்பற்றி சொல்லுங்கள்!
அந்த நகரம் மிகவும் தூரத்தில் இருக்கிறது.


அந்த நகருக்கு பீனிக்ஸ் என்று பெயர். இப்போது அழிந்துபோய் காடு போல மண்டிக்கிடக்கிறது.

ஒருகாலத்தில் அந்நகரம் செல்வச் செழிப்புடன் சிறந்து விளங்கியது.

ஆனால் சிலருடைய சாபத்தினால் அந்த நகரம் அழிந்துபோனது.
சாபத்தால் அந்த நகரம் ஏன் அழிந்து போனது?
ஒரு கொடுங்கோல் மன்னன் அந்த நகரை ஆண்டு வந்தான்!

அந்த சர்வாதிகாரி மன்னனுக்கு கிளி போல ஒரு அழகான மகள் இருந்தாள்.

ஆனால் அவளோ தந்தையைவிட மிகவும் கொடூரமாக நடந்து கொண்டாள். பணிப்பெண்கள் கொடுக்கும் பானத்தை அவர்கள் முகத்திலேயே வீசியடித்தாள்.


பல நாட்டு இளவரசர்கள், மன்னர்கள் அவள் அழகில் மயங்கி அவளை மணமுடிக்க வந்தார்கள்.


ஆனால் அந்த அழகியின் கையைப் பிடிக்கவேண்டுமானால் பல போட்டிகளை சந்திக்கவேண்டியது வரும்.

அவளை மணக்க வருபவன் நச்சுப் பாம்புகள், நச்சு மிருகங்கள், பூச்சிகள் நிறைந்த குகையைக் கடக்கவேண்டும்.

அதைக் கடந்து வந்தவர்கள், வலிமைமிக்க முரட்டுக் காளைகளை அடக்க வேண்டும்.

காளைகளை அடக்கி தப்பிவிட்டாலும், அவன் தலைக்கு அடுத்த ஆபத்து காத்திருக்கும்!


அடுத்து திறந்தவெளி அரங்கில் சிங்கம் சிறுததைகளுடன் மோத வேண்டும்!

சரி! அந்த இளவரசியை யாராவது மணந்தார்களா? இல்லையா?
ஊகூம்! கடினச் சோதனையாயிற்றே! ஆனாலும் வந்தவர்கள் முயன்று பார்த்து தோற்றுப் போனார்கள்.

அவர்களின் தோல்வியைக் கண்டு மன்னனும் மகளும் கேலியாகச் சிரித்து கும்மாளமடித்தார்கள்.


அந்த நகரில் மணமகனாக வந்தவர்கள் பலர் போட்டிகளில் செத்ததுதான் மிச்சம்!

பயணிகளாக அந்நகருக்கு வருபவர்களை சில வழிப்பறி கொள்ளையர்கள் கிடைத்ததை சுருட்டிவிட்டு, பயணிகளை கொன்றார்கள்.

அங்கிருந்த பெரிய சாமிகளுக்கு கோபம் தலைக்கேறியது. ஆத்திரம் தாங்காத சாமியார்கள் இடியை உருவாக்கி அந்நகரை அழித்தார்கள்.

நகரை அழித்த சாமியார்கள் சாபமும் இட்டார்கள்.
வானில் வால்நட்சத்திரம் தோன்றும்போது அந்நகருக்கு விமோச்சனம் கிடைக்கும் என்று கூறியிருக்கிறார்கள்.
அந்த வால்நட்சத்திரம் தோன்றிவிட்டால், அந்நகருக்குள்ள சாபம் நீங்கிவிடும். நகரும் முழுமை அடைந்துவிடும்.

மோசஸ் தாத்தா ! எந்த வால்நட்சத்திரம்?
அந்த வால்நட்சத்திரத்துக்கு மாயாவி என்று பெயர் !
?!

அதற்கு மாயாவின்னு பேரா?
ஆமாம்! ஏன் என்றால் அது நகர்வதை யாராலும் கணிக்க முடியாது!

மாயாவி என்ற நட்சத்திரம் தோன்றினால் அந்நகரம் என்னவாகும்?


மாயாவி நட்சத்திரம் தோன்றிவிட்டால் ஓர் இரவிலேயே சிதிலமடைந்த
நகரம் கட்டிடமாகிவிடும்!

அந்தக் கொடிய மன்னனின் இளவரசி சாபத்தை
தீர்க்கப்போறவனுக்காக காத்திருக்கிறாள்.

அப்படியானால் அந்த
நகருக்கு சாப விமோச்சனம்
தரப்போவது யார்?

?!
அவர் யாருமல்ல! நம்முடைய மாயாவிதான்!
மாமா! நாங்கள் அந்த பாழடைந்த நகரை பார்க்க வேண்டுமே!
இப்பொழுது வேண்டாம் ரெக்ஸ்!
மோசஸ் தாத்தா! கதை அருமை.
மாயாவி! கதை இன்னும் முடிய வில்லையே?
ரெக்ஸ் போய் படுத்து தூங்கு!
?

காட்டு எல்லையில்—
நான் ஓகான் கிராமத்தில் இருந்து வருகிறேன்! மாயாவியை பார்க்க வேண்டும்.
வாருங்கள். அழைத்துச் செல்கிறேன்!

அவன் மாயாவியை சந்தித்தான்.
மாயாவி எங்களுக்கு நீங்கள்தான் உதவவேண்டும்!
என்ன செய்தி?

அடிபட்ட புலி ஒன்று கிராமத்துக்குள் புகுந்து அட்டகாசம் செய்கிறது! அதை அழிக்க வேண்டும்!

உடனே மாயாவி புறப்பட்டார்..
வாருங்கள். போய்
அந்த புலியை
கொல்லுவோம்!

விரைந்து வா
டெவில்!

மாயாவி அருவியைக் கடந்து சென்றார்.

பீனிக்ஸ் நகரின் கதையை கேட்டதும் வால்நட்சத்திரம் தெரிகிறதே!

ஒருவேளை மோசஸ் தாத்தா கூறியது உண்மைதான் போலிருக்கிறது!
மாயாவி ஓகான் கிராமத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தார். குதிரை ஹீரோ காற்றை கிழித்துக்கொண்டு பறந்து சென்றது.

இருண்ட வானில் வால்நட்சத்திரம் தோன்றியது.


மாயாவி ஓகான் கிராமத்தை வந்து அடைந்தார்.
மாயாவி! வாருங்கள் மாயாவி!
புலி எந்தப் பக்கம் சென்றது? சொல்லுங்கள்!

நாங்கள் காட்டுக்குள் சென்றபோது பயங்கர பசியுடன் உள்ள ஒரு புலியைப் பார்த்தோம்.
!!

அது எங்களை தாக்கியது. நாங்கள் முடிந்தவரை அதை அழிக்க பாடுபட்டோம்.

புலி அடித்து ஒருவன் செத்ததும், அடிபட்ட புலியை விட்டுவிட்டு நாங்கள் தப்பி வந்துவிட்டோம்!


அதன்பிறகு அந்த புலி எங்கள் மாட்டு மந்தையைத் தாக்கியது.

கிராமத்துப் பெண்கள் கிராமத்தைவிட்டு வெளியே வர பயந்தார்கள்.

இரவு நேரத்தில் கிராமத்தின் எல்லையில் போடப்பட்ட வேலி அருகே வந்து உறுமிக்கொண்டே இருக்கிறது.
இப்போது அந்தப் புலி எங்கே இருக்கிறது?
பாழடைந்த நகருக்கு அருகே மண்டிய புதருக்குள் சென்றது!
வலிமையான ஈட்டியைக் கொடு!
மாயாவி! ஈட்டியால் புலியைக் கொல்ல முடியாது!


நீண்ட துப்பாக்கி இல்லை! ஈட்டியைத் தவிர வேறு வழியில்லை!
தனியாக போகாதீர்கள் மாயாவி!
என்னோடு டெவில் மட்டும் வரட்டும்! ஹீரோவை பத்திரமாக கவனித்துக்கொள்!
மாயாவியும், டெவிலும் அடிபட்ட புலியை புதர்களுக்குள் தேடினார்கள்.
டெவில்! உன்னிப்பாக கவனித்துச் செல்!

மாயாவி பாழடைந்த பீனிக்ஸ் நகருக்கு வந்தார்.
மோசஸ் தாத்தா சொன்ன பாழடைந்த நகரம் இதுதான் போலிருக்கிறது!
புலி இங்குதான் பதுங்கியிருக்கும் போலிருக்கிறது!
இந்த பாழடைந்த நகருக்கு மேலே வால் நட்சத்திரம்

மோசஸ் தாத்தா சொன்னது போல நடக்கிறதே!
அச்சாபம் மாயாவி வந்தால் தீரும்!
சே...! இது வெறும் கட்டுக்கதையாக இருக்கும்! நான் புலியைத் தேடி யல்லவா இங்கே வந்திருக்கிறேன்!
ஆனால் மாயாவி தேடிவந்த அந்த புலி அந்த மண்டபத்துக்குள்தான் இருந்தது.
திடீரென்று டெவில் குரைத்தது!
?
லொள்... லொள்...

அடிபட்ட புலியைப் பார்த்துத்தான் டெவில் குரைத்தது. புலியைக் கண்டதும், டெவில் அதன் மீது பாய்ந்தது.
டெவில்! நீ விலகிச் செல்!
புலி முன்னங்காலைத் தூக்கி டெவிலைத் தாக்கியது.
படார்...!
வொள்...!
வொள்...!
அதற்குள் மாயாவி அருகில் வர— புலி மாயாவி மீது பாய்ந்தது.
!

மாயாவி புலி மீது ஈட்டியை பாய்ச்சினார்.

புலி மாயாவி மீது விழ— மாயாவி அப்படியே கீழே சரிந்தார்.

மாயாவி கீழே விழ, புலி அவர் மீது பாய முயன்றது. அதற்குள் மாயாவி,
இடையில் செருகியிருந்த கத்தியை உருவினார்.

பிறகு அப்படியே புலியை உருட்டி கிழே தள்ளி, மாயாவி மேலே ஏறிக்கொண்டார்.
புலி வசமாக சிக்கிக்கொண்டதும், மாயாவி கத்தியை வைத்து புலியை 'சதக்'. 'சதக்' என்று குத்தினார்.
புலி கத்திக்குத்துக் காயத்துடன் இறந்துபோனது. புலியுடன் மோதியதால் மாயாவியும் அப்படியே மயங்கிப் போனார்.
திடீரென்று மாயாவி மயக்கம் தெளிந்து எழுந்தார்.
புலியைக் கொன்றவன் இவன் மாவீரன்!
அங்கங்கே குரல் கேட்டது.

மாயாவி தள்ளாடியபடியே மெதுவாக எழுந்தார்.
அங்கே மாயாவியின் வரவால் பீனிக்ஸ் நகரம் சாபம் நீங்கி பழைய மாதிரியே ஜொலித்தது. மன்னனும் இளவரசியும் அங்கே இருந்தார்கள்.
நான் எங்கே இருக்கிறேன்!
மாவீரனே யார் நீ? நீ எப்படி இந்த இடத்துக்கு வந்தாய்!
உன் பெயர் என்ன? இங்கே எதற்காக வந்தாய்?
அதே கேள்விகளைத் தான் நானும் கேட்கிறேன்!
ஏய்... நம்மையே கேள்வி கேட்கிறான்! இவன் ஒற்றன்தான்! வீரர்களே!

இவன் நம் எதிரியின் ஒற்றன். அதனால் இந்த முகமூடியானை கொல்லுங்கள்!
அப்பா...!

வீரர்கள் மாயாவியை சூழ்ந்துகொண்டார்கள்.
இந்த முகமூடியை சும்மாவிடாதீர்கள்! கொல்ல வேண்டும்!
அப்பா வேண்டாம்!


அங்கே குழப்பம் ஏற்பட, மாயாவி துப்பாக்கியை எடுத்துச் சுட்டார்.

அங்குள்ள வீரர்கள் இதுவரை துப்பாக்கியின் சத்தத்தை கேட்டு இருக்காததால் மிரண்டு போனார்கள்.
அன்னியனே! யார் நீ?
என் பெயர் மாயாவி!
மாயாவியா? அட எம்மைக் காக்க வந்தவர்!
ஆ... நாம் இவருக்காகத் தான் இத்தனை ஆண்டுகள் காத் திருந்தோம்!

மாயாவி! எங்கள் சாபத்தை தீர்த்து எங்களை காப்பாற்று!

ஆபத்தாண்டவா?
இவர்களுக்கு என்ன பைத்தியமா?


இளவரசி மாயாவியின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றாள்.
வாருங்கள் மாயாவி!

வாருங்கள்!
உங்களுக்கு விருந்து
காத்திருக்கிறது!

இளவரசி மாயாவியை விருந்துக்கு
அழைத்துச் சென்றாள்.

மாயாவி நம்
இடத்துக்கு வந்தமைக்காக
இந்த விருந்து!
நமக்கு சாப
விமோச்சனம்
தரப்போகிறவர்
இவர்தான்!
முதலில்
நீங்கள் யாரு? என்ன
சொல்கிறீர்கள்?

நான் பீனிக்ஸ்
நகரின் மன்னன
இவள் என் மகள் டெய்சி!
மகா பேரழகி!

கொடுத்த வாக்கை காப்பாற்றி என்னை நீங்கள் மணக்க வேண்டும்!
?!


மாயாவி டெய்சியை கைப்பிடித்து சாபத்தை தீர்ப்பார்!
இது தீயால் எழுதப்பட்ட வாக்கு!

எனக்கு எந்த டெய்சியும் தேவையில்லை!
மாயாவி... நீ என்னை மணக்கா விட்டால்...!

மாயாவி! நீ உயிரோடு திரும்பிச் செல்ல முடியாது!

சுவரில் நான் அதை எழுதவில்லை!
ஏய்... அவர் வெட்கப்படுகிறார்! வாங்கடி!
இனி என்ன வெட்கம்!


பணிப்பெண்கள் காட்டுக் கொடியால் மாயாவியை சுற்றி கட்டினார்கள்.

பணிப்பெண்கள் இருவரும் மாயாவியின் துப்பாக்கியை கையில் எடுத்தார்கள்.
?
இதோ... இவனுடைய இடிக்கருவி...!

ஏய்... நில்...!

சே...! இது கொடியில்லை! கம்பிதான். முறிக்க முடியாது!
உன்னால் விடுவிக்க முடியாது! உனக்கு கடும் போட்டி உண்டு!

இவனை களத்துக்கு இழுத்துச் செல்லுங்கள்!
மன்னன் கட்டளையிட்டான்.


வீரர்கள் கட்டப்பட்டிருந்த மாயாவியை தரதரவென்று இழுத்துப் போனார்கள்.

வெளியே மாயாவி அடித்துப் போட்ட புலி கிடந்தது.
?

வீரர்கள் மேலே இருந்து ஒரு பாதாளத்துக்குள் மாயா வியை தூக்கிப் போட்டார்கள்.
போ...? உள்ளே போய் உன் வீரத்தைக் காட்டு!

மாயாவி கீழே வந்தார். மேலே சுற்றப்பட்டிருந்த கம்பியை விடுவித்துக்கொண்டார்.
அருகே ஒரு வாள் ஒன்று தரையில் செருகி வைக்கப்பட்டிருந்தது.

மாயாவி வாளை கையில் எடுத்துக்கொண்டார்.

மோசஸ் தாத்தா சொன்னது போலவே நடக்கிறதே. நச்சு பாம்புகள், தேள் போன்றவை இங்கே நெளியும்!

அடேயப்பா! பாம்பு, தேள், சிலந்தி போன்றவை நஞ்சானும் குஞ்சானுமாக நெளிகிறதே!
ஒரே தாவு தாவிவிட வேண்டியதுதான்!
அடுத்த நொடி மாயாவி காற்றில் எம்பி, அந்த அறையைக் கடந்தார்.
அடேயப்பா...!
புஷ்ஷ்ஷ்...!
பாம்புகள் சீறின.

!

மாயாவி நச்சுப் பாம்புகளின் அறையைக் கடந்ததும் பயங்கரமான முரட்டுக்காளை மாயாவியை முட்டித்தள்ள வந்தது.
?!

காளை வந்த வேகத்தை பார்த்த மாயாவி ஒரே பாய்ச்சலாக பாய்ந்து தப்பினார்.
!


அதற்குள் அடுத்த காளை மாயாவியை முட்டித்தள்ள பாய்ந்து வந்தது.
இது இரண்டாவது! இன்னும் வருமா?

இதனிடமிருந்து முகமூடியால் தப்பிக்கவே முடியாது!
இல்லை அப்பா! நிச்சயமா ஜெயிச்சிடுவார்!


உடனே மாயாவி வாளுடன் காற்றில் எம்பிக் குதித்தார்.

அங்கே பார்! முட்டாள்தனமாக காளை மீது பாய்கிறான்!
அய்யோ! காளைகள் கொன்றுவிடுமோ...!


மாயாவி எம்பிக் குதித்து காளையின் மீது தாவி ஏறி நின்றார்.
!
!


காளை துள்ளிக்குதித்து ஓடியதால், மாயாவியால் நிதானமாக நிற்க முடியவில்லை.

எப்படியும் முகமூடி கீழே விழுவான்! காளை மிதித்தே அவனை கொன்றுவிடும்!

காளை மாயாவியை புரட்டிவிட குதித்துப் பார்த்தது. தாவிப் பார்த்தது. ஆனால் மாயாவி நிதானமாகவே நின்றார்.


அடுத்த காளை அருகே வந்ததும், மாயாவி சட்டென்று அதன் மீது தாவினார்.

காளை மதில் சுவர் அருகே வந்ததும்,
மாயாவி சுவர் மீது தாவி ஏறினார்.
இனி அடுத்து என்ன ஆபத்து காத்திருக்கிறதோ ?

இதுதான் கடைசி சோதனை !


இங்கு என்ன காத்திருக்கிறதோ தெரியவில்லை !

அங்கே சிங்கமும், புலியும் காத்திருந்தன. மாயாவியைப் பார்த்ததும் அவைகள் கடுமையாக உறுமின.

மாயாவி! இந்த மிருகங்களை அழித்துவிட்டு என்னை கைப்பிடிக்க வேண்டும்! வாக்கும் பலிக்கணும்.
டெய்சி! உன்னை மணக்க வேண்டும் என்பதற்காக நான் இவைகளை கொல்ல விரும்பவில்லை!

இல்லை! நீ அவைகளுடன் மோதியே ஆகவேண்டும்! கொஞ்சம் திரும்பிப் பார்!

சிங்கம் ஒன்று மாயாவியை நோக்கி சிறிப் பாய்ந்து வந்தது.
!
உடனே மாயாவி வாளோடு அதனை நெருங்கினார்.
மாயாவி வாளை சிங்கத்தை நோக்கி செருக— வாள் சிங்கத்தின் அடியில் மாட்டிக் கொண்டது.
மாயாவி! பின்னால் பாரு!
மாயாவியின் பின்னே புலி ஒன்று பாய்ந்து வந்தது.

மாயாவி...
திரும்புங்கள்!

பாய்ந்துவந்த புலி மாயாவி
மீது பாய்ந்தது.

புலி ஆக்ரோசமாக மாயாவி மீது பாய்ந்தது. மாயாவி கையில்
ஆயுதம் இல்லாமல் அதனை சமாளிக்க
முயன்றார்.


அதற்குள் மாயாவி காலில் செருகி இருந்த கத்தியை உருவினார்.

மாயாவி புலி மீது பாய்ந்தார். அதன் மீது ஏறி அமர்ந்து கத்தியால் சதக் என்று குத்தினார்.

அதைப் பார்த்து கூட்டமே அதிர்ந்தது.

முடிவில் மாயாவி புலியைக் கொன்றார்.
வெற்றி! வெற்றி!

ஆகா... நீதான் உண்மையான வீரன்! வாக்கு பலித்து விட்டது! டெய்சி! இனி உனக்கே சொந்தம்!

வேண்டாம்! அவள் ஒரு கொலைகார ராணி! எனக்கு அவள் தேவை யில்லை!
மாயாவி களைப்பில் மயங்கிச் சரிந்தார்.

மாயாவி! நீ எனக்கு வேண்டும். சாகக்கூடாது!
அதற்குள் காட்டுவாசிகள் மாயாவியைத் தேடி வந்தார்கள். சிறிது நேரத்தில் மாயாவி எழுந்தார்.
மாயாவி எழுந்து விட்டார்!
நான் எங்கு இருக்கிறேன்?
மாயாவி! நீங்கள் மயங்கி இருந்ததால் நாங்கள் உங்களை கொலைகார ராணியிடம் இருந்து தூக்கி வந்துவிட்டோம்!

அவள் ஒரு இராட்சசி! என்னைப் போல எத்தனையோ பேரை கொடிய மிருகங்களுடன் மோதவிட்டு சாகடித்திருக்கிறாள்!
அவளுக்கு சரியான பாடம் புகட்டிவிட்டீர்கள் மாயாவி!
நசசுப் பாம்புகள், பயங்கரமான முரட்டுக் காளைகள், சிங்கம், புலி இவைகளுடன் போராடிதான் அவளை மணக்க வேண்டுமாம்!
அதைத்தான் நீங்கள் முறியடித்து விட்டீர்களே?

ஆமாம்!
எத்தனை இளைஞர்களை பழிவாங்கியிருக்கிறாள்!
நீங்கள் வெற்றிப் பெற்றதற்காக இந்தப் பூவை பரிசாக அளிக்கிறோம்!
அடேயப்பா! அந்த கொலைகார ராணிக்குத்தான் என்ன ஆணவம்!
மாயாவி இருவரது கொட்டத்துக்கும் முடிவுகட்டிவிட்ட மகிழ்ச்சியில் தன் குகையை நோக்கி சென்றார்.
(முடிந்தது)

007 ஜேம்ஸ்பாண்ட்

துப்பறியும்

அதிரடி அழகி

ஜேம்ஸ்பாண்டின் வீரதீர சாகசங்கள்
நிறைந்த துப்பறியும் படக்கதை!

படிக்கத் தவறாதீர்கள் !

பிப்ரவரி 1-ந்தேதி
வெளிவருகிறது !

"ராணி காமிக்ஸ்", சென்னை - 600 007.

RANI COMICS
TAMIL FORTNIGHTLY
Regd. No. TN/MS (N)/461
Registered as Newspaper in Sri Lanka

Apsara®
NON-DUST
ERASER

அப்ஸரா நான்-டஸ்ட் எரேஸர் அனைத்து தவறுகளை
சுத்தமாக மற்றும் தூய்மையாக அழிக்கிறது.
ஒருவித படிவங்களையோ அல்லது
கறைகளையோ ஏற்படுத்துவதில்லை. அழுக்கில்லை,
தொல்லையில்லை.

ஹிந்துஸ்தான் பென்சில்ஸ் லிமிடெட்
வழங்கும் ஒரு தரமான தயாரிப்பு

உங்கள் புத்தகங்களை
தூய்மைப்படுத்த தூய்மையான வழி

everest/96/HPL/94 tm